
# மன்னா

## CSI தமிழ் திருச்சபை அலைன்




பொழிவு 13 ஆகஸ்ட் 2020 ஆகாரம் 08




**கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**நீங்கள் எல்லாரும் இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரரா இருக்கிறீர்களே....**

ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்தானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனைப்பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே, யூதன் என்றும் கிரேக்கர் என்றும் இல்லை, அடிமை என்றும் சுயாதீனரென்றும் இல்லை, ஆண் என்றும் பெண்ணென்றும் இல்லை நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாய் இருக்கிறீர்கள். கலாத்தியர்:3:26,27,28.

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் என்றாலே நமக்கு இரண்டு காரியங்கள் நினைவுக்கு வருபவை ஆகும். ஒன்று நமது தாய்நாட்டின் (இந்தியா) சுதந்திர தினம், இரண்டாவது உலகமெங்கும் இருக்கும் தாய்மார்கள் தினம் இவர்களை நினைவில் கொண்டு வாழ்த்தவும்! ஜெபிக்கவும்! அழைக்கப்படுகிறோம். நாம் எல்லோரும் வேற்றுமையின்றி, ஒற்றுமையுடன் வாழ்வதுதான் கிறிஸ்துவின் மேலான சீடத்துவம் என்பதை உணர்ந்து நமது தேசத்திலும், நாம் வாழும் தேசத்திலும் வேறுபாடுகளை களைந்து அனைவரையும் ஒன்றிணைத்து வாழ்த்தவும், ஜெபிக்கவும், உதவி செய்யவும் அழைக்கப்படுகிறோம்.

தொடர்ந்து Corona Virus சர்வதேச அளவில் பரவி வரும் இந்த காலகட்டத்தில் நமது ஆவிக்குரிய விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல், ஜெபிக்கவும் தொடர்ந்து ஆண்டவருக்காக எழும்பி பிரகாசிக்கவும் அழைக்கப்படுகின்றோம். திருச்சபையின் வாசல்கள் திறக்கப்பட்டு மறுபடியும் நாம் ஆராதிக்க கிருபை கூர்ந்த கர்த்தரை துதிக்கிறேன்; மற்றும் Online மூலமாக நடத்தப்படும் ஆராதனை மற்றும் அனைத்து நிகழ்வுகளிலும் தவறாமல் தங்களை குடும்பமாய் இணைத்துக்கொண்டு ஆண்டவரின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள அன்புடன் அழைக்கப்படுகிறோம்.

தொடர்ந்து நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆண்டவரை ஆராதிக்கவும், Corona தொற்று நோயிலிருந்து மக்கள் பாதுகாக்கப்படவும் மற்றும் உங்கள் மத்தியில் திருப் பணியாற்ற நாங்கள் நல்ல பயணத்தை மேற்கொள்ளவும் தொடர்ந்து ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் திருப்பணியில் உங்கள் ஆயர்...

REV. S. P. BASKAR / +91 80726 09810 / EMAIL: BASKARNANCY40@GMAIL.COM

# கர்த்தாவே...

**நான் கூப்பிடுகிற சத்தத்தை நீர் கேட்டு,**
**எனக்கு இரங்கி,**
**எனக்கு உத்தரவு அருளிச்செய்யும்.**
**சங்கீதம் 27: 7**



அன்புக்குரிய இறைமக்களே!

இந்த சங்கீதம் ஆண்டவரிடம் ஆழ்ந்த நம்பிக்கையுடன் பாடப்பட்ட பாடலாகும், ஆண்டவரிடம் மிகுந்த நம்பிக்கையுடன் / விசுவாசத்துடன் அடைக்கலம் தேடுபவர்களுக்கு கொடுக்கப்பட்ட சங்கீதம் ஆகும். அதே நேரத்தில் ஆண்டவர் தம்மை தள்ளி விடக்கூடாது என்று புலம்பி அழுகின்ற சங்கீதம் ஆகும் (சங்27:7-13) அப்படி அழுகின்றவரின் ஜெபம் கேட்கப்படும் என்பதாகும் (சங்27:14) இந்த சங்கீதத்தின் முதல் பகுதி (சங்:27:1-6) நம்பிக்கையின் பாடலாகும், இரண்டாவது பகுதி (சங்:27:7-14) புலம்பலின் பாடலாகும்.

## 1. நம்பிக்கையின் பாடல்: சங் 27:1-6

★ கர்த்தர் என் வெளிச்சம்/ ஆண்டவரே என் ஒளி....... பழைய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே ஒருமையில் கர்த்தர் என் வெளிச்சம் அல்லது ஆண்டவர் என் ஒளி என்று அழைக்கப்படுகின்றார்.

★ புதிய ஏற்பாட்டில் யோவான்: 8:12'ல் நான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன் என்கிறார், ஒளி என்பது அனைத்து நன்மைகளையும் குறிக்கின்ற ஒன்றாகும், எனவே ஆண்டவரே அனைத்திற்கும் உரியவர் என்பதை புரிந்துக்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

★ என் மாம்சத்தைப்பட்சிக்க அல்லது என் உடலை விழுங்க........ என்னை பொல்லாத எதிரிகள் தாக்கும்போது அவர்களே இடறி விழுந்தார்கள்.

★எனக்கு விரோதமாக பாளையமிற ங்கினாலும்... என் இதயம் பயப்படாது. எபிரேய மொழியில் "லெப்" என்ற சொல் இதயத்தைக் குறிக்கும் சொல் ஆகும். இது முழு மனித ஆளுமையைக் குறிக்கின்ற ஒன்றாகும்.

★ தீங்கு நாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து இது அவருடைய சமூகத்தில் (ஆலயத்தில்)ஆராதிக்கும் போது எந்த தீங்கும் அவர்களை அணுகுவது இல்லை என்பதை சுட்டிக்காட்டுகிறது.

## II. புலம்பலின் பாடல்: சங்கீதம் 27:7-14.

★ கர்த்தாவே, நான் கூப்பிடுகிற சத்தத்தை நீர் கேட்டு........இது ஆண்டவரே என் குரலை கேளும் என்பதாகும்.

David's triumphantly confident prayer of God to deliver him from all those who conspire to bring him down. The prayer presupposes the Lord's covenant with David Faith's soliloquy which publicly testifies to the king's confident reliance on the Lord, introduces the prayer and adds faith's dialogue with itself faith exhorting faith to wait patiently for that which is sure, though not yet seen.

★ என் முகத்தைத் தேடுங்கள்....... புறப்படு எனது முகத்தை தேடு அல்லது நாடு என்பதற்கு ஆண்டவரே எனக்கு இரங்கும் உம்மை வழிபடுவேன், உமக்கு பலி செலுத்துவேன் என்று புலம்புவதில் அடையாளம் ஆகும்

★ என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும் என்பது உதவி, உறுதுணையற்றுத் தனித்துவிடப்பட்ட நிலையில் எனக்கு ஒன்றுமில்லை என்று புலம்புகின்ற வேலையில் ஆண்டவரே எனக்கு தகப்பனும், தாயுமானவர் என்று அழைப்பது ஆகும்.

★கர்த்தருக்கு காத்திரு.......அவர் உனக்கு துணையாய் இருப்பார் என்று ஆண்டவரோடு உரையாடி ஜெபிக்கின்ற நிலையை அடையாளப்படுத்துகிறது.

அன்பானவர்களே! இன்றைக்கும் ஆண்டவர் நம்முடன் இருக்கின்றார், என்ற நம்பிக்கையுடன் அவர் நம்மை பாதுகாப்பவர்! நாம் அவரை நோக்கி கூப்பிடும்போது நமக்கு எல்லா நிலைகளிலும் துணை செய்கிறவர் என்பதை உணர்ந்து அவருக்குள் நிலைத்து நிற்க அழைக்கப்படுகின்றோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**இறைப்பணியில் உங்கள் ஆயர்**

Rev. S.P. Baskar...



# ஆயரம்மா மடல்

## தெபோராள்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்.

**அக்காலத்திலே லபிதோத்தின் மனைவியாகிய தெபோரா என்னும் தீர்க்கதரிசியானவள் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தாள். நியாதி :4:4**

**தெபோராள் தனி சிறப்பு மிக்க தலைவி:** தெபோராள் இஸ்ரவேலை நாற்பது ஆண்டுகள் நியாயம் விசாரித்த ஒரு தலைவி (நியாதி.5:32) மக்களை விசாரிப்பதற்காக ஒரு பனைமரத்தின் கீழ் இருப்பவர். எளிமையான, துணிச்சலான பெண் தலைவி எனக் கூறலாம். இஸ்ரயேல் மக்களின் முறுமுறுப்பு, அன்றாட தேவைகள் உறவு விரிசல்கள் இப்படி பல பிரச்சனைகள் இவரிடத்தில் வந்தபோது அவர்கள் எல்லோரையும் 40 ஆண்டுகள் வழி நடத்துவதோடு அல்லாமல் யூதர்களைக் காப்பாற்ற இவர் எடுத்த துணிச்சலான திட்டங்கள் மிகவும் ஆச்சரியமானவையாக இருக்கின்றன.

**தெபோராள் தனிச்சிறப்பு வாய்ந்த தீர்க்கதரிசி:** திருமறையில் இரண்டு தீர்க்கதரிசிகள் சொல்லப்படுகின்றனர். "உல்தா" "தெபோரா" இவ்விருவரும் தீர்க்கதரிசி களாக பார்க்கப்படுகின்றனர் காரணம் இவர்களுடைய செயல்பாடுகள், தீர்க்கதரிசனப்பணி என்பது சுட்டிக்காட்டுகின்ற பணி எனலாம். மக்கள் தவறு செய்யும்போதும், கடவுள் நம்பிக்கைக்கு எதிராக செல்லும்போது அவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டி அவர்களை உணர்த்துவது ஆகும். தெபோராள் கடவுளின் அழைப்பைப்பெற்ற தீர்க்கதரிசி ஆவார். கடவுளுக்கும் மக்களுக்கும் இடையே ஓர் இடையீட்டாலராக இருக்கின்றார்.(நியாதி. 4:4)

**தெபோராள் தனிச் சிறப்புவாய்ந்த மனைவி:** இவரை அறிமுகப்படுத்தும்போது இவர் லபிதோத்தின் மனைவியாகவே அறிமுகப்படுத்துகிறார். (நியாதி.4:4) இவர் ஒரு சிறப்பான மனைவியாகவும் வாழ்ந்திருக்கிறார், பொதுவாக பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் குடும்ப வாழ்வை ஒதுக்கி விடுவார்கள் அதாவது குடும்பத்திற்கு நேரம் ஒதுக்க மாட்டார்கள் என்பது சமுதாயத்தில் காணப்படுகிறது.. ஆனால் தெபோராள் அப்படிச் செய்யவில்லை, மாறாக இவர்களின் இல்லம் இஸ்ரவேல் மக்கள் அனைவரும் வந்து போவதற்கு ஓர் இடமாக இருக்கிறது. எனவே (நியா தி.5:7)இல் "இஸ்ரவேலின் தாய்" என அழைக்கப்படுகின்றார். திருமறையில் வேறு எந்தப் பெண்ணிற்கும் இப்படிப்பட்ட அடைமொழி வழங்கப்பட்டது கிடையாது. இஸ்ரவேலின் அரசர் இல்லாதக்காலக்கட்டத்தில் இம்மக்களை "யாமின்" என்னும் அண்டை நாட்டு குறுநில மன்னன் 20 ஆண்டுகளாக துன்புறுத்தி வந்த போது மக்களுக்கு ஆறுதல் அளித்ததோடு, அவர்களின் குடும்பத் தேவைகளுக்கு உதவி செய்தவர் தெபோராள் ஆவார். எனவே இஸ்ரவேல் மக்களிடையே ஒரு நல்ல மதிப்பை பெற்ற தாய் ஆவார்.

இன்றைக்கு தெபோராள் போல நாமும் சிறப்பு பெற்ற தாயாக விளங்க ஆண்டவர் நம்மையும் அழைக்கின்றார். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

இறைப்பணியில் உங்கள் ஆயிரம்மா...

MRS. E. NANCY BASKAR / PASTOR'AMMA




கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே..

பூமியிலுள்ள சகல ஜனங்களுக்கும் நான் உங்களை கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன் என்ற மாறாத கர்த்தரின் நாமத்தில் மிகுந்த அன்புடன் வாழ்த்துகிறேன் ஊழிய பணியில் உங்களுடைய எல்லா பங்களிப்புக்கும் நன்றி கூறுகிறேன்.

2020'ம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களை கடந்து இருக்கிறோம்; நம்மை காத்து நடத்தும் கர்த்தர் முன் வரும் நாட்களிலும் தமது கூடார மறைவில் ஒளித்துவைத்து பாதுகாப்பாக. தொற்று நாட்களில் வாழ்வாதாரம் இழந்து வருமானம் குறைந்து கண்ணீரின் பள்ளத்தாக்கை கடக்கிற யாவரையும் கர்த்தர் கரம் தூக்கி விடுவாராக.

ஆலய கதவுகள் திறக்கப்பட்டு, மறுபடியும் நாம் ஆராதிக்க கிருபை கூர்ந்த கர்த்தரை துதிக்கிறேன். மெய்யாய் தேவன் நமக்கு செவி கொடுத்தார் நம் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார். இந்த நாட்களில் அபுதாபியிலிருந்து வந்து நமக்கு ஆராதனையை நடத்தி தருகிற அருமையான போதகர் அருட்திரு. ஜேம்ஸ் பால்ராஜ் ஐயா அவர்களுக்கு நமது சபையின் சார்பாக நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இணையதளம் மூலமாக ஆண்கள் ஐக்கிய சங்கம், பெண்கள் ஐக்கிய சங்கம், வாலிபர் கூடுகை, சிறுவர் வேதாகம பள்ளி கூட்டங்கள் மற்றும் ஆராதனைகளை நடத்துவதற்கு உதவி புரிந்த அருள்திரு.எஸ்.பி.பாஸ்கர் போதகர் ஐயா அவர்களுக்கும், அதன் பொறுப்பாளர்களுக்கும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போதுள்ள கால சூழ்நிலைகள் யாவும் மாறுவதற்கும், குறித்த நேரத்தில் நமது போதகர் ஐயா அவர்களுக்கு விசா கிடைக்கபெற்று, இறை பணியை நம்முடைய திருச்சபையில் சிறக்க செய்யவும் நீங்கள் யாவரும் ஜெபிக்க வேண்டிக்கொள்கிறேன். உங்களுடைய ஜெபமும் ஈகையும் ஈடுபாடும் நிச்சயமாக கர்த்தரால் கனபப்படுத்தபடும். கர்த்தர் உங்களை மேன்மேலும் உயர்த்தி ஆசீர்வதிப்பார். உங்களுக்காகவும் ஜெபிக்கிறோம்..

இப்படிக்கு ...
கிறிஸ்துவின் பணியில்
எஸ். சுரேஷ் ராஜன்





# நம்மை தெரிந்து கொண்டவரின் அழைப்பு...

சிருஷ்டித்தவரும் உருவாக்கினவருமான தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார், “உன்னை பெயர் சொல்லி அழைத்தேன் நீ என்னுடையவன்” என்று. தாயின் கர்ப்பத்தில் தோன்றும் முன்னமே நம்மை தெரிந்து கொண்ட தேவன், நம் பெயரையும் அறிந்திருக்கிறார். வேதத்தில் பல மனிதர்களை பெயர் சொல்லி அழைத்திருக்கிறார். வேதம் கூறுகிறது, இதோ உன்னை புடமிட்டேன் ஆனாலும் வெள்ளியைப் போலல்ல, உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்து கொண்டேன்(ஏசாயா 48:10). உலகத்திலே உங்களுக்கு உபத்திரவம் உண்டு ஆனாலும் திடன் கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்.

**ஒழிந்திருந்த ஆதாம்**: அப்பொழது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: “நீ எங்கே இருக்கிறாய்” என்றார் (ஆதி 3:10). தான் சிருஷ்டித்த சிருஷ்டி, தன் கற்பனைகள மீறினிதனிமித்தம் நிர்வாணி என உணர்ந்து, குளிர்ச்சியான மாலை வேளையில் தன்னை உருவாக்கினவரோடு தோட்டத்திலே உலாவும் பாக்கியத்தை இழந்தவர்களாய் தங்களை அவருடைய பார்வையிலிருந்து மறைத்துக் கொள்ள எத்தனிக்கின்ற அந்த வேளையில் அவர் தன் படைப்பை பெயர் சொல்லி “ஆதாமே” என அழைக்கிறார்.

**சோதனையிலிருந்த ஆபிரகாம்**: அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத்தி லிருந்து, ஆபிரகாமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டார். அவன்: இதோ, அடியேன் என்றான்(ஆதி 22:11). சோதனையின் மத்தியில் ஆபிரகாம் தன் குமாரனை வெட்டும்படி கத்தியை எடுத்தபோது தேவன் “ஆபிரகாமே, ஆபிரகாமே” என்று பெயர் சொல்லி அழைத்த தேவன் நீ தேவனுக்கு பயப்படுகிறவன் என்பதை அறிந்து கொண்டேன் என்று சாட்சி பகருகிறார்.

**குழப்பத்திலிருந்த யாக்கோபு:** அன்று இரவிலே தேவன் இஸ்ரவேலுக்கு தரிசனமாகி: யாக்கோபே யாக்கோபே என்று கூப்பிட்டார். அவன் இதோ அடியேன் என்றான் (ஆதி 46:2). யோசேப்பு எகிப்திலே உயிரோடிக்கிறான் என்பதை அறிந்த இஸ்ரவேல், நான் மரணமடையுமுன்னே அவனைப் போய் பார்ப்பேன் என்று சொன்னான். பின்பு தனக்கு உண்டான யாவற்றையும் சேர்த்துக் கொண்டு பெயர்செபாவுக்குப் பறப்பட்டு தேவனுக்கு பலி

செலுத்தினான். இரவிலே தேவன் இஸரவேலுக்கு தரிசனமாகி; “யாக்கோபே யாக்கோபே” என்று கூப்பிட்டார்; நீ எகிப்து தேசத்திற்குப் போகப் பயப்பட வேண்டாம், அங்கே உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன், நான் உன்னுடனே எகிப்துக்கு வருவேன், நான் உன்னை திரும்பவும் வரப்பண்ணுவேன் (ஆதி 46: 1-4) என்று வாக்குத்தத்தம் பண்ணினார்.

**வனாந்தரத்திலிருந்த மோசே:** முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி: மோசே, மோசே என்று கூப்பிட்டார். அவன்: இதோ, அடியேன் என்றான (யாத் 3:4). பார்வோனுக்கு பயந்து மீதியான் தேசத்தில் வாழ்ந்த மோசே தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை வனாந்தரத்தில் மேய்த்து வந்தான். அவன் ஓரேப் மட்டும் வந்தபோது எரிகிற முட்செடியின் நடுவிலிருந்து தேவன் “மோசே மோசே” என்று அழைத்தார் (யாத் 3:4–12). நாற்பது வருஷம் வனாந்தரத்தில் வாழ்ந்த மோசேயை தேவன் இஸ்ரவேல் ஜனங்களை மீட்கவும், வழி நடத்தவும் தலைவனாக தெரிந்து கொண்டார்.

**தூக்கத்திலிருந்த சாமுவேல்**: அப்பொழுது கர்த்தர் வந்து நின்று, முன் போல சாமுவேலே என்று கூப்பிட்டார். அதற்கு சாமுவேல்: சொல்லும், அடியேன் கேட்கிறேன் என்று சொன்னான் (1-சாமு3:10). கர்த்தருடைய வசனம் அபூர்வமாய் இருந்து பிரத்தியட்சமான தரிசனம் இல்லாதிருந்த காலத்தில், தேவாலயத்தில் தூங்கிக் கொண்டிருந்த சாமுவேலைக் கூப்பிட்டார். சாமுவேலோ இன்னும் தேவனை அறியாதிருந்தான். முதல் மூன்று முறையும் அது தேவனுடைய அழைப்பு என்பதை அறியாதிருந்த போதிலும நான்காவது முறையாக அழைத்து தான் செய்யப் போகிற காரியத்தை தீர்க்கத்தரிசனமாக உரைத்தார்.(1சாமு3:10-11) இவர்கள் மட்டுமல்ல, இன்னும் அனேகரை தேவன் பெயர் சொல்லி அழைத் திருப்பதை நாம் வேதத்தில் காணலாம்.

ஆம், அருமையானவாகளே! தான் பாவி என்பதை உணர்ந்து தேவனுடைய பார்வைக்கு தன்னை மறைத்துக் கொண்ட ஆதாம், நெருக்கமான சூழ்நிலையிலிருந்த ஆபிரகாம், குழப்பமான சூழ்நிலையிலிருந்த யாக்கோபு, வனாந்தரத்தில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த மோசே, தேவ சத்தத்தை அறியாதிருந்த சிறுவனாகிய சாமுவேல் போன்றோரை பெயர் சொல்லி அழைத்து, தாம் அவர்கள் மேல் வைத்திருந்த சித்தம் நிறைவேறும் வண்ணமாக வாக்குக் கொடுத்து வழி நடத்திய தேவன் இன்று நம்மையும் பெயர் சொல்லி அழைத்து, அழைப்புக்கு செவி சாய்த்தவர்கள் மேல் அவர் வைத்திருக்கிற தம்முடைய சித்தத்தின் பாதையிலே வழி நடத்த காத்திருக்கிறார். தேவனுடைய சத்தத்திற்காக நாம் நமது செவிகளைத் திறந்து காத்திருப்போமா? தேவன் தாமே நம் ஒவ்வொருவருக்கும் அவ்வண்ணமான ஆசீர்வாதத்தைத் தருவாராக.

ARTICLE BY MR. MARK NESAMONY

**தேவனிடத்தில் பேச.. பேச... இருதயம் பலப்படும்**
**மனிதனிடம் பேச.. பேச... இருதயம் பலவீனப்படும்**



# முதியோரை பாதுகாத்தல்

அக்டோபர்'1 முதியோர் தினமாக கொண்டாடப்படுகிறது. முதியோர்கள் தற்போதய சமுதாயத்தில் உரிய மதிப்பும், பாதுகாப்புமின்றி வாழ்வதால் இப்படிப்பட்ட தினங்களை அமைத்து கொண்டாடுவதின் வழியாக அவர்களின் மரியாதைகளையும் மாண்பினையும் உறுதி செய்கிறோம்.

20'மணி நேரத்திற்கு ஒரு முதியவர் கொலை செய்யப்படுவதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. ஆண்டுதேறும் முதியவர்கள் மீதான வன்முறைகள் அதிகரித்த வண்ணம் உள்ளது. கேரளாவிற்கு அடுத்தபடியாக தமிழ் நாட்டில்தான் முதியோர்கள் இல்லங்கள் அதிகமாக இருப்பதாக தேசிய முதியோர் காப்பக முகமையின் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. இப்படியான புள்ளிவபரங்கள் முதியோர்களின் பாதுகாப்பின்மையையும், சொந்த பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோர்களின் நிலைமையையும் விளக்குகிறது.

எரிக்சன் என்ற மனோதத்துவ நிபுணர் "childhood and Society" என்ற தம்முடைய புத்தகத் தில் முதிர்வயது 60ல் துவங்குகிறது என்கிறார். அப்படி பார்த்தால் நம்முடைய இந்தியாவிலேயே சுமார் தற்போதய கணக்கின்படி 80 மல்லியன் முதியோர்கள் காணப்படுயின்றனர் இது 2025'ம் ஆண்டில் 125 மில்லியனாக உயர வாய்புகள் இருக்கிறது. அவைகள் நமக்கு உணர்த்தும் உண்மை என்னவெனில் முதியோர்களின் எண்ணிக்கை உயர்வதால் சமூகத்தில் பிரச்சினைகள் அதிகரிக்கும். எனவே பிரச்சினைகளை தீர்க்க திட்டங்களும் சிறப்பு கவனங்களும் நாம் மேற்க்கொள்ள வேண்டும். குறிப்பாக கிறிஸ்தவ திருச்சபைகளில் அதற்க்குரிய சிறப்பு கவனத்துடனும் கண்ணியமாகவும் கவனிக்கப்படவேண்டும். இளைஞர்களுக்கு சிறப்பு போதனைகள் கொடுக்கப்பட வேண்டும்.

கிரேக்க புதிய ஏற்ப்பாட்டில் "presbueteroi" என்ற சொல் முதியோர்களை குறிக்க பயன்படுத்தினர். திருச்சபைகளின் தந்தை என்று அழைக்கப்படுகிற

கிளமண்ட் என்பவர் வயதானவர்களுக்கு மதிப்புக் கொடுக்க இதை பயன்படுத்தினார். பரிசுத்த பவுல் தம்முடைய நிருபங்களில் பிரூஸ்பியூட்டேஸ் (presbutes) என்ற கிரேக்க சொல்லை வயதானவர்களை குறிக்க பயன்படுத்தினார் (பிலமோன் 9:11, 2கொரி. 5:20, எபே 6:20). வயதானவர்கள் மதிக்கப்படவேண்டும் என்பதை இவ்வசனங்கள் நமக்கு தெளிவாக்குகிறது.

கிறிஸ்துவுக்குள் அன்பதனவர்களே! நாமும் நம்முடைய பெற்றோர்கள் மற்றும் முதியோர்களை பாதுகாக்கவும் அவர்களிடம் கண்ணியமாகவும் மிகுந்த மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும். இதனை நாம் முன்மாதிரியாக நம்முடைய திருச்சபைகளில் நம்முடைய நடத்தைகளின் மூலமான செய்திகளின் மூலமக வரும் தலைமுறையினருக்கு கொண்டு செல்ல வேண்டியது வளரும் முதியவர்களாகிய நமது கடமையுமாக இருக்கிறது.

- **நெல்சன் சோபித ராஜ்.**



LISTEN TO YOUR ELDERS ADVISE;
NOT BECAUSE THEY ARE ALWAYS RIGHT,
BUT BECAUSE
THEY HAVE MORE EXPERIENCE
OF BEING WRONG...

# Encouraging Verses in the Bible

JOSHUA 1: 9 – BE STRONG OF GOOD COURAGE; BE NOT AFRAID, NEITHER BE THOU DISMAYED.

MATTHEW 5:3-5 – BLESSED ARE THE POOR IN SPIRIT; FOR THEIRS IS THE KINGDOM OF GOD. BLESSED ARE THEY THAT MOURN; FOR THEY SHALL BE COMFORTED. BLESSED ARE THE MEEK; FOR THEY SHALL INHERIT THE LAND.

JUDGES 6:16 – SURELY, I WILL BE WITH THEE!

HAGGAI 2: 19 – FROM THIS DAY ON I WILL BLESS YOU.

PSALMS 28:7 – THE LORD IS MY STRENGTH AND MY SHIELD.

PSALMS 46: 10 – BE STILL AND KNOW I AM WITH YOU.

2 CORINTH 12: 10 – WHEN YOU HAVE DONE EVERYTHING YOU CAN DO, THAT'S WHEN GOD WILL STEP IN AND DO WHAT YOU CAN'T DO.

COL 3: 23 – WHATEVER YOU DO, DO IT HEARTILY FOR THE LORD AND NOT TO PLEASE MEN.

PSALMS 34: 18 GOD IS CLOSE TO THE BROKEN HEARTED AND SAVES THOSE WHO ARE CRUSHED IN THE SPIRIT.

PSALMS 37: 5 – COMMIT EVERYTHING TO THE LORD AND TRUST HIM HE WILL HELP YOU.

MATTHEW 21: 22 – AND ALL THINGS YOU SHALL ASK BELIEVING YOU SHALL RECEIVE.

1 CORINTH 16: 13 – WATCH, STAND IN FAITH, BE BRAVE BE STRONG

Joshua Koshy

# Walking On Water With Christ...



Article by Ms. Jenisha D/o Mr. M.C Christopher

A baby is born, not yet knowing for sure, how to breathe or to feed. It must learn, though, in order to survive, and so it does. And once it does, it never once looks back and imagines a life lived otherwise. Similarly, babies learn to walk, holding hands, walls and supports, until they can stand on their own two feet, on solid ground. But unbeknownst these children, God himself holds them steady, just as Isaiah 46:3-4 says,

***" ..You whom I have upheld since your birth, and have carried since you were born. Even to your old age and Gray hairs I am he; I am he who will sustain you. I have made you and I will carry you; I will sustain you and I will rescue you"***

So it should come as no surprise when the Bible demonstrates plainly this fact throughout history: when Israel walked through the Red Sea, and their sandals did not wear out, or when Elijah outran the king's chariot, or when Shadrach, Meshach and Abednego

walked in the furnace and even as Peter walked on water toward Jesus, it is apparent that we can walk anywhere just so long as our Lord holds our hand through it all.

Then the question that arises is no longer what, but how. To walk with Christ, on water or otherwise, what could the 'step-by-step' procedure be? Ida Scudder, a woman significantly experienced in the act, on her life's journey building the kingdom of God, mentions that only one step will be revealed, and to have the faith to take that step, and to take each and every such consecutive step, would be sufficient. We are not alone this journey for in Luke 17:5-6,

***"The apostles said to the Lord, "Increase our faith!" He replied, "If you have faith as small as a mustard seed, you can say to this mulberry tree, 'Be uprooted and planted in the sea,' and it will obey you."***

This mustard seed, though tiny and seemingly insignificant, once planted, sprouts rapidly, and grows, spreading its progeny far and wide, generously providing a place of rest to tired birds. It feels humbling and awe-inspiring to observe, then, that the Kingdom of Heaven is likened to the same mustard seed of faith, that one requires to enter it in the first place. To this end, we must make the active choice to search out the truth and sow faith in ourselves, through thorough analysis, sincere meditation and a rational understanding of the words of the Bible, and then implement our faith to produce good deeds in keeping with this faith, enabling us to personally experience God's hand in our lives, furthering our faith, the foundation of our hope.

The process of developing and maintaining our faith is probably the difficult part. For everyday attractions, afflictions and distractions appeared to easily consume our thought process so much so that we do not have the time to even think about God, let alone allow ourselves to ponder over his glorious guiding hand or his unwavering care and unconditional love. Fortunately, life comes to a standstill, once in a while, over a relaxed weekend or a global pandemic, and just so long as we do not say 'maybe next time' to these literally God-given opportunities, we will be able to tend to the mustard seeds of our faith and bring them to fullness in Christ.

MS. JENISHA WON THE 1ST PRIZE FOR THIS ARTICLE IN CMC VELLORE'2020.


This very faith, when tended diligently, will grow into a tree with deep roots that don't let it dry up in a drought or break apart in a storm, one that continues to grow with its roots intertwined in fellowship and allows one to trust in God, no matter the circumstances, a faith that can sustain, nurture, convert or heal both others and ourselves as in Luke 17:19:

*"Then He* (Jesus) *said to him, "Rise and go; your faith has made you well."* "No matter how close one draws to God, it shall happen time and again, that we may fall victim to the flesh, just as Abraham gave a half-truth, David's mind strayed to the wife of another man, Peter began to sink owing to his fear and Paul did, not what he wanted to do, but did what he did not want to do, despite himself. Let us take heart at these moments knowing that yet again, we are not alone, and our Heavenly Father knows that the spirit is willing, but the flesh is weak. We need only seek repentance from our sins and hope to try again on a new day, willing to receive the Holy Spirit and listen to its conviction.

To walk on water, or through fire, or past mockery or into each day's troubles, or up to your greatest fears, then, is all impossible alone, and is simultaneously child's play with Christ. That choice, is however, ours to make in every moment, but we shall never look back if we choose rightly, just as 1 Peter 1:8 says

***"Though you have not seen him, you love him; and even though you do not see him now, you believe in him and are filled with an inexpressible and glorious joy".***

**Amen...**





Men's FELLOWSHIP

# உயர்வுகள் வருவதெப்படி?

உயர்வு என்பது மனிதனுக்கு எத்தனை பிரியமானது!
தாழ்வு என்பது எத்தனை வெறுப்பானது!
செய்யும் எல்லாவற்றிலும் உயர்வு, எல்லோரையும்விட உயர்வு,
எந்நாளும் உயர்வு என்பது சாத்தியமாகுமா?
தனி வாழ்விலும், குடும்ப வாழ்விலும், பணியிலும்
உயர்வு என்ற ஒன்றிற்காக
இரவும் பகலும் உழைப்பவர்கள் – பாடுபடுகிறவர்கள் மிக மிக அதிகம்!
ஆனால் உழைத்த உழைப்பிற்கு ஏற்ற பலன் காண்பவரோ மிக மிக சொற்பம்!

வாழ்க்கையில், ஊழியத்தில் உயர்வு என்பது என்ன?

அது முழு மன நிறைவு, மன சந்தோஷம், மன மகிழ்ச்சி, மன தைரியம்!
பணத்தினாலோ, பதவியினாலோ, மனித பெலத்தினாலோ வரும் உயர்வுகளில்
மன நிறைவு இருப்பது இல்லை, மன சந்தோஷம் காண்பது இல்லை,
மன மகிழ்ச்சி பொங்குவதில்லை, மன தைரியம் கிட்டுவதும் இல்லை!
ஏனென்றால் அந்த அரிய உயர்வுகள் மனித சக்திக்கு அப்பாற்பட்டது,
தேவ சக்திக்கு உட்பட்டது, மனித முயற்சிக்கு அப்பாற்பட்டது,
தேவ கிருபைக்கு உட்பட்டது.

அன்னாள் அதற்கு ஓர் உதாரணம்!
அவள் கணவன் எல்க்கானாவிடம் பணம், வசதி எல்லாம் இருந்தது.
அனைத்திலும் அன்னாளுக்கு இரண்டு மடங்கு அதிகமாகவே கிடைத்தது.
ஆனால் அன்னாளுக்கோ
சந்தோஷமே இல்லை, மனதில் சமாதானமே இல்லை!
தனக்கு இருக்கும் ஒரு முக்கியமான தேவையைச் சந்திக்க
அவள் எடுத்த முயற்சிகள் எத்தனை எத்தனையோ! நாம் அறியோம்!
கையில் ஒரு பிள்ளையை எடுக்க, அவள் கர்ப்பத்தில் ஒரு கனி உருவாக
அவளுக்கு இருந்த வாஞ்சைதான் என்ன!
அது இல்லாமையால்,
வீடு, வசதி, வேலையாட்கள், மிருக ஜீவன்கள் மற்றும் எத்தனை இருந்தாலும்,
அன்னாளின் மனக் கிலேசமோ தணியவில்லை, அதிகரிக்கவே செய்தது!

யாராவது அந்தக் குறையை கிள்ளிக் காட்டிவிட்டால்,
அவள் மனம் விம்மி அழுதது!
முகம் வாடி வதங்கியது, உலகில் அனைத்தும் கசந்தது!

எதிலும் உயர்வு, எந்நாளும் உயர்வு என்பது அதிமுக்கியமானது!
அதை அடைவதற்கு மனிதர்கள் எத்தனை ஏணிகள் செய்தாலும்
ஏறி அடைந்ததே இல்லை! மனித முயற்சிகளினால் உயர்வு பலித்ததே இல்லை.
உயர்வு என்பதை எதிலும் பெற்றுவிட, எந்நாளும் அனுபவித்து விட,
நானும், நாமும் செய்துவிடவேண்டியது ஒன்றே ஒன்றுதான்!
அது அன்னாளைப் போன்று இருதயத்தை ஊற்றிவிடுவதுதான்!(1 சாமு. 1:15).
கண்ணீர் நமக்கு உணவாகி விடுவதுதான் (சங்கீதம் 42:3).

---

**தன் காலில் நிற்பவர்கள் வாழ்வார்கள்**
**முழங்காலில் நிற்பவர்கள் உயர்வார்கள்**

சங்கீதம் 62:8, இந்த உலக ஜனங்களைப் பார்த்து
‘உயர்வுக்கு’ வழி எது என்பதைக் கூறுவதை
மனம் திறந்து வாய்விட்டு வாசியுங்கள்: “ஜனங்களே, எக்காலத்திலும்
அவரை நம்புங்கள்; அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்”.

இந்த உலகத்தில் எந்த மனிதனும், எந்த ஊரில் – வீட்டில் வாழ்ந்தாலும்,
தேவை எதுவாக இருந்தாலும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்
பிதாவாகிய தேவனை நோக்கி, முழங்கால் படியிட்டு,
கேட்கத் துவங்கிவிட்டால் உயர்வு பிறந்துவிடும்!

ஒளிவு மறைவு இன்றி, உள்ளதை உள்ளபடி சொல்லி,
தவறுகள், தப்பிதங்கள், குற்றங்களை, பாவங்கள் கழுவப்படுவதற்கு,
இருதயம் சுத்தமாவதற்கு இருதயத்தை ‘ஊற்றிவிட்டால்’
அரிதானவைகள் இலகுவாகிவிடும், கிடைக்காதவை கிடைத்துவிடும்,
அடையமுடியாதவைகளை அடைந்துவிடுவோம்!

உள்ளம் இயேசுவின் காலடிகளில் ஊற்றப்படாமல்,
உயர்வை எதிர்பார்க்கவே வேண்டாம்,
உள்ளம் திறக்கப்படவேண்டும், உள்ளம் ஊற்றப்படவேண்டும்,
உள்ளம் வெறுமையாக்கப்படவேண்டும்,
பரிசுத்தாவியானவர் வெறுமையாக்கப்பட்ட உள்ளத்தை நிரப்பிவிடவேண்டும்!
அப்பொழுது பார்வை உயர்வடைந்துவிடும்! பேச்சு உயர்வடைந்துவிடும்!
செயல்கள் உயர்வடைந்துவிடும்! பலன்கள் உயர்வடைந்துவிடும்!
உயர்வு உள்ளத்தில் பிறக்கின்றது, வாழ்க்கையில் பிரதிபலிக்கின்றது!

உள்ளத்தை தேவ சமுகத்தில் ஊற்றிவிட்ட பின்பு,
அன்னாள் முகம் சுருங்கவே இல்லை, மனம் கொதிக்கவே இல்லை!
திட்டவட்டமாகத் தெரிந்துவிட்டது –
பத்தே மாதத்தில் அவள் பெறப்போகும் உயர்வை உலகம் அறிந்துவிடும்!
“அவருக்கு முன்பாக என் சஞ்சலத்தை ஊற்றுகிறேன்;
அவருக்கு முன்பாக என் நெருக்கத்தை அறிக்கையிடுகிறேன்” (சங். 142:2).

உன் சஞ்சலம் எத்தனையாக இருந்தாலும்,
மன சஞ்சலத்தினால் வாழ்ந்தது போதும் என்று
வாழ்க்கையின் ஓரத்திற்கே நீ வந்திருந்தாலும்,
உன் நெருக்கம் எதுவாக இருந்தாலும், பண நெருக்கடி, வியாதியின் பிடி,
மனிதரின் பகடி, பொறாமைக்காரர்களின் சதி, குழந்தை இல்லை,
வீடு வசதி இல்லை, வேலை இல்லை, சரியான படிப்பு இல்லை,
எதிலும் உயர்வே இல்லை, உலகில் ஓர் அந்தஸ்துடன் வாழ்வதற்கு
ஒன்றுமே இல்லை என்றாலும்,
உன் வாழ்க்கை சரித்திரத்தை முற்றும் மாற்றி எழுத
உன் உள்ளத்தை தேவ சமுகத்தில் ஊற்றிவிடு!
எவ்வளவு சீக்கிரமாக ஊற்றிவிடுவாயோ அத்தனை சீக்கிரமாக
உயர்வு உனக்கு உரித்தாகிவிடும்!
உயர்வுக்கு இரகசியம் உனக்கும் இயேசுவுக்குமுள்ள இரகசிய தொடர்புதான்!
அதற்குப் பெயர்தான் ஜெபம்!

ஒருவருக்கும் தெரியாமல் உன் கதவைப் பூட்டி, முழங்கால்படியிட்டு,
இயேசுவே என்று வாய்விட்டு கதறிவிடு!



**உயர்வை நோக்கி ஓடுகிறவர்கள் உண்டு,**
**உயர்வு தங்களை நோக்கி ஓடி வருவதைக் காண்பவர்களும் உண்டு!**



கண்ணீரால் அவர் பாதத்தைக் கழுவி விடு!
உன் இருதயத்தை இயேசு தம் இரத்தத்தால் கழுவி விடுவார்!
அப்பொழுது, ‘உயர்வு’ உன் சொந்தமாகும்!
எதிலும், எந்நாளும் உன் சொந்தமாகும்!

“எழுந்திரு, இராத்திரியிலே முதற்சாமத்திலே கூப்பிடு;
ஆண்டவரின் சமுகத்தில்
உன் இருதயத்தைத் தண்ணீரைப்போல ஊற்றிவிடு” – புலம்பல் 2:19

உன் இருதயத்தில் எத்தனையோ நல்விருப்பங்கள் இருக்கலாம்,
கணவனுக்காக, மனைவிக்காக, பிள்ளைகளுக்காக, சபைக்காக,
ஊழியங்களுக்காக, தேசத்திற்காக, ஆறு லட்சம் கிராமங்களுக்காக,
கிராமங்களைத் தத்தெடுப்பதற்காக, சுதந்தரிப்பதற்காக,
ஊழிய எல்கைகளை விசாலப்படுத்துவதற்காக,
அநேகரை இயேசுவின் மந்தைக்குள் சேர்ப்பதற்காக,
எத்தனை எத்தனையோ நல்விருப்பங்கள் இருக்கலாம்.
அவைகள் அனைத்திலும் நீ உயர்வு காணவேண்டுமானால்
உன் இருதயம் அன்னாளைப் போன்று, தேவ சமுகத்தில் ஊற்றப்படவேண்டும்;
வேறு குறுக்கு வழிகளே இல்லை!

ஆவிக்குரிய ஜீவியத்தில் உயர்வு!
உன் தனிப்பட்ட வாழ்வில் உயர்வு! குடும்ப ஜீவியத்தில் உயர்வு!
சபை வளர்ச்சியில் உயர்வு! சுவிசேஷ ஊழியத்தில் உயர்வு!
அத்தனைக்கும் அடிப்படை உன் முழங்கால்! உன் ஜெப நேரங்கள்!
உன் இருதயம் தண்ணீரைப் போல
இயேசுவின் சமுகத்தில் ஊற்றப்படும் நேரங்கள்!
ஆம், உனக்கு உன் முழங்காலில் உயர்வு காத்திருக்கிறது!

Ref: Bro. Emil Jebasingh

## ஓர் பிரார்த்தனை

அனைத்திற்கும் உயர்ந்தவரே, தம்மால் சிருஷ்டிக்கப்பட்ட நாங்கள்
தாழ்ந்திருக்க தாம் விரும்புவதே இல்லை என்பதற்காக ஸ்தோத்திரம்!
மனிதர்களைப் பாவத்திலே விழவைத்து,
சகதிகளில் சிக்க வைத்து, உளையில் மூழ்க வைத்து
இறுதியில் தாழ்வுக்கு மேல் தாழ்வு, வெட்கத்திற்கு மேல் வெட்கம், துக்கத்தின் மேல் துக்கம்
என்று சாகடிக்கும் பிசாசின் கைகளில் இருந்து, தொடர்புகளிலிருந்து, உறவுகளிலிருந்து,
இந்த ஜெபத்தைப் படிக்கும் ஒவ்வொரு சகோதரனையும், சகோதரியையும் விடுவித்தருளும்.
அவர்கள் இருதயம் தமது சமுகத்தில் ஊற்றப்படும் வேளையில்
இயேசுவின் இரத்தம் அவர்கள் இருதயத்தைக் கழுவிடச் செய்யும்.
பரிசுத்தாவியானவர் அவர்கள் இருதயத்தை நிரப்பிவிடச் செய்யும்.
அப்பொழுது, தம்மால் வரும் உயர்வு எங்கள் அனைவருக்கும் சொந்தமாகிவிடும்!
இந்தச் சகாயத்தை இந்த வேளையில்
தம்மிடம் கேட்கும் - கெஞ்சும் அனைவருக்கும் கொடுத்து,
இந்த வாழ்க்கையில் – இந்த உலகத்தில்
அவர்களை உயர்ந்த ஸ்தலத்தில் வைக்கவேண்டும் என்று
நாங்கள் உயர சிலுவையில் உயர்த்தப்பட்ட
இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்.

---

உலகத்தில் உயர்வதற்கு உபாயங்கள் செய்வார் உண்டு - உதாரணம் ஆமான்
உபவாசித்து ஜெபித்து உயர்ந்தவரும் உண்டு - உதாரணம் எஸ்தர்

WOMEN'S

FELLOWSHIP

# வேதத்தை தியானிக்கும் வழிமுறைகள்

இருபத்து நான்கு சரித்திர நாவல்களை எழுதிய ஸ்காட்லாந்தின் வால்டர் ஸ்காட் என்பவர் மரண தருவாயில் இருந்தார். தனக்கு உதவிசெய்து கொண்டிருந்த மனிதனை பார்த்து, எடுத்து வாசி, எடுத்து வாசி என்றார். அந்த மனிதன் புத்தக அலமாரியைத் தடவியவனாக, ஐயா, எந்தப் புத்தகத்தை வாசிக்க சொல்கிறீர்கள் ? என்றான். என்ன நீ இப்படி கேட்கிறாய்... புத்தகம் என்றாலே வேதப்புத்தகம் தான் என்றார் வால்டர் ஸ்காட். மரிக்கும் ஒரு மனிதனுக்கும் வாழத் துவங்கும் ஒரு மனிதனுக்கும் ஒரே விதமான பயன் தரும் ஒரே புத்தகம் வேதப்புத்தகம் தான் !

இன்றைக்கு அனேகர் தங்கள் வாழ்க்கையில் நெருக்கப்படும் காலம் வரை, கஷ்டத்தை சந்திக்கும் வரை வேதப்புத்தகத்தை நாடுகிறதில்லை. இந்த கடினமான நாட்களிலும் நாம் வாழ்வை சந்திக்க, நம்மை அனுதினமும் ஆயத்தப் படுத்தும் புத்தகம் இந்த வேதப்புத்தகம் தான். நாம் இந்த உலகத்தை விட்டு கடந்து போக போகிறோம். ஆனால், வேதப்புத்தகத்தை வாசித்து, கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைக்கும்போது நாம் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்கிறோம். வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று அறிந்திருக்கிறீர்களே என்று இயேசு கூறி இருக்கிறார். இந்த வேதப்புத்தகத்தை எப்படி நாம் சரியாக கற்றுக்கொள்வது என்று நான்கு குறிப்புகளின் கீழ் பார்ப்போம்.



- வேதத்தின் முழு நோக்கத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும்

- குறிப்பிட்ட ஒரு வசனத்தை படிக்கும்பொழுது அந்த வசனம் யாருக்கு சொல்லப்பட்டது என்பதை கருத்தில்கொள்ள வேண்டும்

- அந்த வேதப்பகுதி சொல்லப்பட்ட சந்தர்பத்தை நாம் கவனிக்க வேண்டியது அவசியம்

- மூல பாஷையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதையும் கண்டுபிடிக்க வேண்டும்

# வேதத்தை கிரமமாக படிக்க
# ஏழு விதிமுறைகளை நாம் கற்றுக் கொள்வோம்

1. ஜெபத்தோடு ஆரம்பிக்க வேண்டும்
2. வேதத்தை கவனமாக வாசிக்க வேண்டும்
3. வேதத்தை நாம் ஆழ்ந்து படிக்க வேண்டும்.
4. வேதத்தை தியானிக்க வேண்டும்
5. வேதத்தைக் குறித்து மற்றவர்கள் கூறியிருக்கும் கருத்துக்களையும் வாசிக்க வேண்டும்
6. வேதத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்
7. நாம் கற்று கொண்ட வேத சத்தியங்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும்

பிரியமானவர்களே, நாம் கிறிஸ்துவின் சாட்சிகளாயிருக்க வேண்டும். எனவே நாம் வேதத்தையும் மற்றவர்களுக்கு கொடுத்தே ஆகவேண்டும்.

-பெண்கள் ஐக்கிய சங்கம்
Mrs. Jein Rajavel

**EVERY 2ND THURSDAY @ 8: PM**

**WOMEN'S FELLOWSHIP MEETING**

**ONLINE – VIA ZOOM**



YOUTH FELLOWSHIP

# HOPING WHEN THINGS ARE HOPELESS

PUTTING YOUR BELIEFS IN ACTION

## Have you felt like giving up lately ?

We all know what it’s like to feel like giving up on everything. Difficult uninvited circumstances, inner turmoil, relational problems, unanswered prayer… These all effect us badly and make us lose hope.Yet if we give in we also lose the will to move on and stop believing that we can pull through.The worst thing that can happen to us however is to turn away from God instead of sincerely turing to Him again and again. Indeed the Word of God equates being without God in this world as being without hope (Eph 2:12).

## EVEN THOUGH ALL SEEMS LOST…

*Despite its difficulty sometimes, choosing to hold on to His love and truth in prayer opens us up to a different reality altogether:*

"May the God of hope fill you all with joy and peace as you trust in him, so that you may overflow with hope by the power of the Holy Spirit (Rom 15:13)"

**Words of Hope**


**Why are you downcast, O my soul? Why so disturbed within me? Put your hope in God, for I will yet praise him, my Savior and my God. (Psa. 43:5)**


**I wait for the Lord , my soul waits, and in his word I put my hope … O Israel, put your hope in the LORD, for with the LORD is unfailing love and with him is full redemption (Psa. 130:7)".**

# In Practice

"As we let go of ungodly earthy desires and attachments we make room for more of the greatest gift we can ever hope for the gift of God's Presence in our lives. Spend quality time in prayer and ask God to draw you and to surprise you"


**With teachings rooted in love for others, the Gospel can be a powerful tool for social change.**








# PRIMARY-A










Teacher:
Mrs. Shally Melbin



# பராபரனைப் போற்றும் பாடலைப்பற்றி

## எண்ணி எண்ணி துதி செய்வாய்

பணவசதி படைத்த குடும்பத்தில் வாழ்ந்த கிளிபோர்டு குமார், 03.07.1961 அன்று டாக்டர் ஹெலனைத் திருமணம் செய்தார். இல்லற வாழ்வில் இறைவனின் ஆசியால் இரு ஆண்மக்களையும் இரு பெண் பிள்ளைகளையும் பெற்றெடுத்தனர், வசதியாக மருத்துவப் பணியைத் தொடர்ந்த டாக்டர் கிளபோர்டு குமார், ஆண்டவரின் அன்பின் அழைப்பை ஏற்றுக்கொள்ள விருப்பமின்றி மறுத்தார். பல தேவ ஊழியர்களின் அழைப்புச் செய்திகளையும், எச்சரிப்புத் தீர்க்கத்தரிசனங்களையும் உதாசீனப்படுத்தினார்.

சில நாட்களில் அவரது சுகபோக வாழ்க்கையில் புயல் வீச ஆரம்பித்தது, பிசாசுகளின் தொல்லைகளாலும், நண்பர்களின் துரோகச் செயல்களால் வந்த பில்லிசூனியக் கட்டுகளாலும், தனது வயல் நிலங்கள், பணம், பொருள் அனைத்தையும் இழந்தார், அவரது மருத்துவத் தொழிலும் குறைவுபட்டு, தன்னையே மாய்த்துக் கொள்ள விரும்புமளவிற்குச் சோர்ந்து போனார். அந்நாட்களில், அவரது மனைவி ஆண்டவரை ஏற்றுக்கொண்டு ஆவியின் வல்லமையுடன் புது பெலன் பெற்றுப் புது வாழ்வை மேற்கொண்டார்.

இந்நிலையில் இச்சகோதரனின் தொண்டையில் புற்று நோய் வந்து, அது முற்றிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதால், சென்னை மருத்துவமனையில் மருத்துவர்கள் அவரைக் கைவிட்டனர். குணமாக்க அரிதான இக்கொடிய நோயின் விளைவை, டாக்டர் கிளிபோர்டு குமார் நன்கு அறிந்திருந்தார். மரணபயம் அவரை அண்கொண்டது. ஒன்றும் செய்ய இயலாத நிலையில் ஆண்டவரின் பாதத்தில் வீழ்ந்தார். வேதம் வாசித்தார். பல முழு இரவு ஜெபக் கூட்டங்களுக்குச் சென்றார். கர்த்தரைத் தேடிய அவருக்குத் தரிசனங்கள் கிடைத்தன.

தொடர்ந்து, வேலூர் C.M.C. மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அந்நிலையில், “ஆண்டவரே, நீர் எனக்கு ஜீவன் தந்தால், உமக்கு ஊழியம் செய்வேன்,” என்று பொருத்தனை செய்தார். ஆபரேசனில் இவர் நிலையிலிருந்த மற்ற நோயாளிகள் மரிக்க, இவரோ ஒரே மாதத்தில் அற்புத சுகம் பெற்றார். சபையிலே கர்த்தருக்கு நன்றி கூறி பாட்டுப்பாடித் தன் சாட்சியைப் பகிர்ந்து கொண்டார்.

1978-ம் ஆண்டு ஜனவரி மாதம் நாகர்கோவிலில் நடைபெற்ற இந்திய தேவ சபையின் பொது கன்வென்ஷனில் பாட அழைப்பு பெற்ற அவரை, தேவன் அக்கூட்டத்தின் சிறப்புச் செய்தியாளராக மாற்றினார். அன்றுமுதல் ஆவியின் வரங்கள் அளித்தது, அற்புத சுகமளிக்கும் தேவ ஊழியராகவும் உபயோகிக்க ஆரம்பித்தார். தேவன் வல்லமையாகக் கிரியை செய்து, இச்சகோதரனின் ஊழியத்தைக் தொடர்ந்து ஆசீர்வதித்து வருகிறார். 300 பாடல்களையும் எழுதி, இன்னிசையில் நற்செய்திப் பணிசெய்யக் கிருபை செய்திருக்கிறார்.

கிளிபோர்டு குமார், தன்னைச் சந்தேகம் கொண்டு சோர்வடையச் செய்த பிசாசின் தந்திரத்தை எண்ணியவராய், இப்பாடலின் முதலாம், மூன்றாம் சரணங்களை எழுதி முடித்தார். பின்னர் மலையாளப் பாடலின் மொழிபெயர்ப்பாக, இரண்டாம் சரணத்தையும் இணைத்தார். மலையாளப் பாடலின் எலியாவின் சால்வை இவரது தமிழகத்தில் எலியாவின் தேவன் என மாறியது.

இப்பாடலின் அனுபவத்தால் புதுபெலனும் திடநம்பிக்கையும் பெற்ற டாக்டர் கிளிபோர்டு குமார், இன்றும் அந்தகார சக்திகளுடன் போராடி, இயேசுவின் நாமத்தினால் பிசாசின் பிடியிலும், பில்லிசூனியக் கட்டுகளிலுமிருந்து மக்களை விடுவித்து, உற்சாகமாய் கர்த்தருக்கு ஊழியம் செய்து வருகிறார். தென்னிந்தியத் திருச்சபையின் அங்கமாகவும், தேவ சபையின் ஐக்கியமாகவும் விளங்கும் இவரது திருப்பணியை நாம் ஜெபத்தில் தாங்குவோமா?



# COLOR THIS

Color this picture of Paul and Barnabas on their missionary trip.



# BIBLE VERSE

Use the words in the word bank to complete the Bible verse.
**(Hint: John 16:13 NLT)**

When the ____________ of

__________ comes, he will

____________ you into all

____________ .

| | |
|---|---|
| truth | Spirit |
| guide | truth |

*Kinder / Beginner*




Don't forget to send your answers to Pastor Uncle by the 15th of this month.

**csitcalain@gmail.com**

BEGINNER & PRIMARY

**SYMBOLICALLY SPEAKING: Use the letters and symbols chart to decode the sentence and give reference from the chapter Jude for the words decoded.**




**FILL IN THE BLANKS WITH CORRECT ANSWER FROM THE BOX**


PRI / JUNIOR

| | | | | |
|---|---|---|---|---|
| FEAR | FRUIT | WAVES | FEASTS | DARKNESS |
| ROOTS | ONLY | CLOUDS | SHAME | CARRIED |

These are spots in your love ----(1)----, while they feast with you without ----(2)----, serving ----(3)---- themselves. They are ----(4)---- without water, ----(5)---- about by the winds; late autumn trees without ----(6)----, twice dead, pulled up by the ----(7)----; raging ----(8)---- of the sea, foaming up their own ----(9)----; wandering stars for whom is reserved the blackness of ----(10)---- forever.

1) I stand as examples of God
2) I am brother of James.
3) I run greedily.
4) I walk in my own lust.
5) I perished in the rebellion.






THE LETTER OF

# JUDE

Intermediate SENIORS

1) Jude's initial desire was to write about our common salvation. But something happened – Jude found it necessary to write a different letter. WHAT WAS IT ABOUT?
2) They didn't wear a "Danger: False Teacher" name tag. But they are. Which words supports this statement.
3) Three examples that show the certainty of God's judgment against the certain men. Who are they?
4) We don't know where Jude received this information about this dispute. He may have received a unique revelation from God. What is that dispute about?
5) Greedily in the error of Balaam for profit. What was the error of Balaam?
6) What was the prophecy told by Enoch the 1st prophet of the Bible?
7) Woe to them! Them refers to Whom?
8) On the last days what type of people you could see?
9) God destroyed those who did not believe..who are those?
10) God has reserved in everlasting chains for whom?

**LEARN SOMETHING NEW :** Mother Teresa; She never saw her mother or sister again after leaving home to become a missionary.

**LEARN SOMETHING NEW :** Michael the archangel: This angelic being is mentioned by name in four passages of the Bible: Daniel 10, Daniel 12, Revelation 12 and here in Jude. He is an archangel, which simply means a "leading angel."

**LEARN SOMETHING NEW:** Though Herod's tomb has been discovered in the ruins of the ancient city of Herodium, one mystery remains: where is Herod's body? When Netzer opened Herod's tomb, all he found was a broken sarcophagus, but no remains.




**LEARN SOMETHING NEW:** Saint Thomas is the famous "doubting Thomas" of the New Testament. He reportedly left Palestine for Asia after the crucifixion of Jesus with a mission to covert India's Jews. He is said have founded seven churches in Kerala. The present population of Syrian Christians claims to be descendant of the people that attended these churches.

# மத்தேயு 1 to 10 Matthews



# Bible Quiz

1. மத்தேயு' முதல் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து பெண்கள் யார்..?
2. யோவான் ஸ்நானகரின் ஊழியத்தை பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக உரைத்த தீர்க்கதரிசி யார்?
3. யாரைக்குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று இயேசு சீஷர்களிடத்தில் சொன்னார்?
4. யோவான்ஸ்நானின் ஆகாரம் எது?
5. இயேசுவின் சீடர் பன்னிரண்டு பேரில் எத்தனை பேர் மீனவர்கள் ?
6. ஆயக்காரோடும், பரிசேயரோடும் போஜனம் பண்ணுகிறதென்ன என்று கேட்ட பரிசேயருக்கு இயேசு அளித்த பதில் என்ன?
7. ஆபிரகாம் முதல் இயேசு கிறிஸ்து வரை எத்தனை தலைமுறைகள்?
8. எங்கே, எப்படி, ஏன் நம் வெளிச்சம் பிரகாசிக்க வேண்டும் ?
9. கொடுப்பதும், ஜெபம் செய்வதும், உபவாசிப்பதும் ஏன் இரகசியமாக செய்யப்பட வேண்டும்..?
10. மலைப்பிரசங்கத்தின்'படி, இயேசு முதன்மையானதாகக் கருதிய மூன்று காரியங்கள் யாவை..?
11. மத்தேயு'வில் இயேசு குறிப்பிட்டுள்ள இரண்டு வாசல்கள், இரண்டு வழிகள், இரண்டு மரங்கள், இரண்டு ஆண்கள், இரண்டு வீடுகள் என்ன..?
12. யாருடைய வேலைக்காரன் கொடிய வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான்?



## July'2020

**விடை எழுதியவர்கள்**

திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல்
திரு.ஜெயபிரதீப் கிரிஸ்டோபர்
திருமதி. ஜெனிபர் கிரிஸ்டோபர்
திரு. M.C கிறிஸ்டோபர்
திருமதி. ஜமுனா ராணி
திருமதி. ராதிகா செல்வகுமார்
திருமதி. எபென் A. பிரசாத்
திருமதி. ஜெயந்தா ஜாண்
திருமதி. ஜெயின் ராஜவேல்
திருமதி. அகஸ்டா லாரன்ஸ்
திருமதி. பிப்லின் நெல்சன்
திருமதி. ஹெப்சிபாய் நேசமணி
திருமதி. ரோஸ்லின் பாலாஜி
திருமதி. ஷாலினி கிங்சிலி
திருமதி. பமீலா டேனியல்
திருமதி. ஷெரின் டியென்ஷன்
செல்வி. ஜெரின் மேக்டலின்

**ஜூலை மாத விடைகள்**

1. சகரியா14:20
2. சகரியா 9:6
3. மல்கியா 4:2
4. சகரியா10:2
5. மல்கியா 2:15
6. மல்கியா 1:14
7. மல்கியா 2:7
8. சகரியா13:9
9. சகரியா11: 17
10. மல்கியா 3:16



You did it!

# Congratulations

JOHAN SANJO
JASON ERIC
JEMIMA ASHNI
JEREMIAH ALAN
ROSHAN

JASON ERIC
JOHAN SANJO
JEMIMA ASHNI
JEREMIAH ALAN
ROSHAN

SHELBINO PAUL
ROSHAN
JASON ERIC
JONATHAN ASHER

HAZEL HARTLYN
REAGAN SHAN
CRASSLIN DEVONA
JANIA PRENI
JOHAN SANJO
CHRIS GABRIEL
JEMIMA

ROSHAN
JONATHAN
JOSHUA & JOSHIKA
DENNIS
ANNLIN & ANGELIN



# HAPPY BIRTHDAY

# August

| | |
|---|---|
| 02-AUG | MRS. BLESSY GRACE JONISH |
| 03-AUG | MR. D. RAJAVEL |
| 12-AUG | MR. JEREMIAH KINGSTON |
| 14-AUG | MSTR. JEREMIAH ALAN |
| 15-AUG | MR. Y. MESIAH DAS |
| 16-AUG | MR. DERIN JOY |
| 20-AUG | MSTR. ALDAN DERICK |
| 24-AUG | BABY. CRASSLIN DEVONA |
| 28-AUG | MRS. AUGUSTA LAWRENCE |
| 28-AUG | MS. JOANNA STANLY |
| 30-AUG | MRS. PADMA JOY |
| 31-AUG | MRS. ANITHA RAJAN |

"MAY HE GRANT YOU YOUR HEART'S DESIRE AND FULFIL ALL YOUR PLANS...!"



# August

5 MR. PUSHPARAJ &
MRS. BIJI KUMARI

18 MR. DERICK GASBATH JOY &
MRS. SHEEBA DERICK

21 MR. M.C.CHRISTOPHER &
MRS. BEETA CHRISTOPHER

23 MR. JASON SAMUEL &
MRS. PETRICIA SANTHI

26 MR. YOBU &
MRS. ANNA JOTHI



Happy Anniversary!

## தினசரி வேத வாசிப்புப் பகுதிகள் – ஆகஸ்ட் 2020

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும். சங்கீதம் 119:18

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | நியா. 15 | அப்போ. 19 | எரேமியா 28 | மாற்கு 14 |
| 2 | நியா. 16 | அப்போ. 20 | எரேமியா 29 | மாற்கு 15 |
| 3 | நியா. 17 | அப்போ. 21 | எரேமியா 30,31 | மாற்கு 16 |
| 4 | நியா. 18 | அப்போ. 22 | எரேமியா 32 | சங்கீதம் 1,2 |
| 5 | நியா. 19 | அப்போ. 23 | எரேமியா 33 | சங்கீதம் 3,4 |
| 6 | நியா. 20 | அப்போ. 24 | எரேமியா 34 | சங்கீதம் 5,6 |
| 7 | நியா. 21 | அப்போ. 25 | எரேமியா 35 | சங்கீதம் 7,8 |
| 8 | ரூத் 1 | அப்போ. 26 | எரேமியா 36 | சங்கீதம் 9 |
| 9 | ரூத் 2 | அப்போ. 27 | எரேமியா 37 | சங்கீதம் 10 |
| 10 | ரூத் 3,4 | அப்போ. 28 | எரேமியா 38 | சங்கீதம் 11,12 |
| 11 | 1 சாமுவேல் 1 | ரோமர் 1 | எரேமியா 39 | சங்கீதம் 13,14 |
| 12 | 1 சாமுவேல் 2 | ரோமர் 2 | எரேமியா 40 | சங்கீதம் 15,16 |
| 13 | 1 சாமுவேல் 3 | ரோமர் 3 | எரேமியா 41 | சங்கீதம் 17 |
| 14 | 1 சாமுவேல் 4 | ரோமர் 4 | எரேமியா 42 | சங்கீதம் 18 |
| 15 | 1 சாமுவேல் 5,6 | ரோமர் 5 | எரேமியா 43 | சங்கீதம் 19 |
| 16 | 1 சாமுவேல் 7,8 | ரோமர் 6 | எரேமியா 44 | சங்கீதம் 20,21 |
| 17 | 1 சாமுவேல் 9 | ரோமர் 7 | எரேமியா 45,46 | சங்கீதம் 22 |
| 18 | 1 சாமுவேல் 10 | ரோமர் 8 | எரேமியா 47 | சங்கீதம் 23,24 |
| 19 | 1 சாமுவேல் 11 | ரோமர் 9 | எரேமியா 48 | சங்கீதம் 25 |
| 20 | 1 சாமுவேல் 12 | ரோமர் 10 | எரேமியா 49 | சங்கீதம் 26,27 |
| 21 | 1 சாமுவேல் 13 | ரோமர் 11 | எரேமியா 50 | சங்கீதம் 28,29 |
| 22 | 1 சாமுவேல் 14 | ரோமர் 12 | எரேமியா 51 | சங்கீதம் 30 |
| 23 | 1 சாமுவேல் 15 | ரோமர் 13 | எரேமியா 52 | சங்கீதம் 31 |
| 24 | 1 சாமுவேல் 16 | ரோமர் 14 | புலம்பல் 1 | சங்கீதம் 32 |
| 25 | 1 சாமுவேல் 17 | ரோமர் 15 | புலம்பல் 2 | சங்கீதம் 33 |
| 26 | 1 சாமுவேல் 18 | ரோமர் 16 | புலம்பல் 3 | சங்கீதம் 34 |
| 27 | 1 சாமுவேல் 19 | 1கொரி. 1 | புலம்பல் 4 | சங்கீதம் 35 |
| 28 | 1 சாமுவேல் 20 | 1கொரி. 2 | புலம்பல் 5 | சங்கீதம் 36 |
| 29 | 1 சாமு. 21,22 | 1கொரி. 3 | எசேக். 1 | சங்கீதம் 37 |
| 30 | 1 சாமுவேல் 23 | 1கொரி. 4 | எசேக். 2 | சங்கீதம் 38 |
| 31 | 1 சாமுவேல் 24 | 1கொரி. 5 | எசேக். 3 | சங்கீதம் 39 |




Strictly For Private Circulation
Editor: Rev. S. P. Baskar
Po. Box. 67747. Tel/Fax +971 3 755 9630
Mobile: +91 80726 09810
E-Mail: csitcalain@gmail.com. Web: csitamilparishalain.org